**M.Phil. in Music**

கர்நாடக - இந்துஸ்தானி இசைகளில் காணப்படும் மீட்டு (தந்தி) வாத்தியக் கருவிகளின் ஒப்பீட்டாய்வு

**Name of the Researcher : Mr.Arumugampillai Sathiyaseelan**

**Effective Date of the Research : 29/04/2013**

கர்நாடக - இந்துஸ்தானி இசையில் காணப்படும் மீட்டுத்தந்தி வாத்தியக் கருவிகளின் ஒப்பீட்டாய்வு எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ் ஆய்வானது ஆறு இயல்களாக பிரிக்கப்பட்டு கர்நாடக - இந்துஸ்தானி இசையில் காணப்படும் மீட்டுத் தந்தி வாத்தியங்களின் தோற்றம், வளர்ச்சி, செய்யும் முறைமைகள், சுருதி கூட்டும் முறைமை, அவ்வாத்தியங்களில் மிளிர்ந்த கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு என்பற்றை நூல்கள் வாயிலாக வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் விளக்கி நிற்கின்றது. இயல் ஒன்றில் ஆய்வு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இயல் இரண்டு இலக்கிய மீளாய்வில் வேதகால இசை, தமிழிசை, சிந்துவெளி இசை, தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள பாவகைகள், வண்ணங்கள், வாத்திய இசை பற்றி வளக்கப்பட்டுள்ளது. இந்துஸ்தானி இசையின் தோற்றமும் வளர்ச்சியும் அவ்இசையிலுள்ள மீட்டுத்தந்தி வாத்தியங்கள், கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு என்பவை விபரிக்கப்பட்டுள்ளது. இயல் மூன்றில் இந்திய இசையினதும், இசைக்கருவிகளினதும் சான்றாதாரங்கள், தாளம், ஜதிகள், இசைக்கருவிகளைச் சுட்டும் கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயல் நான்கில் கர்நாடக இசையில் மீட்டுத் தந்தி வாத்தியங்கள் எனும் தலைப்பின் கீழ் யாழின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, சுருதி கூட்டும் முறைமை, யாழின் வகைகள், யாழின் பாகங்கள், தம்புராவின் தோற்றமும் வளர்ச்சியும்.

வீணையின் தோற்றமும் வளர்ச்சியும், வீணையின் வகைகள், அவ்வாத்தியங்களில் மிளிர்ந்த கலைஞர்கள், கோட்டு வாத்தியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயல் ஐந்தில் இந்துஸ்தானி இசையில் காணப்படும் மீட்டுத் தந்தி வாத்தியங்களின் தோற்றம், வளர்ச்சி, செய்யும் முறைமை, சுருதி கூட்டும் முறைமை, புகழ்பெற்ற வாத்திய கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இயல் ஆறில் இரண்டு இசைகளில் உள்ள மீட்டுத் தந்தி வாத்தியங்களின் தோற்றம், வளர்ச்சி, ஒற்றுமைகள், வேற்றுமைகள் விரிவாக ஒப்பீட்டு ஆய்வு செய்யப்பட்டு நிறைவுரையடன் இவ்ஆய்வு நிறைவு பெறுகின்றது.